# Tnpsc Model Question Paper 2 – General Studies in Tamil

Click Here to Download More Tnpsc Model Questions

1. முற்று திசைவேகம் என்பது கீழ்கண்ட எதோடு தொடர்புடையது?

**(அ) பாகியல் விசை** (ஆ) பரப்பு இழு விசை

(இ) வட்டப்பாதை இயக்கம் (ஈ) நேர்கோட்டு இயக்கம்

2. சூரியனுக்கு அடுத்தாற்போல் புவிக்கு அருகிலுள்ள விண்மீன் எது?

(அ) ஆன்ட்ரோமோடா **(ஆ) ஆல்பாசெஞ்சூரி** (இ) சிரியஸ் (ஈ) சைனி

3. மனப்பாட நினைவாற்றல் என்பது சொற்சார் பொருள்களை நினைவூட்டும் திறன் ஆகும். இதை அளவிட பயன்படும் பொதுவான முறை(கள்) என்பது (வை).

(அ) நினைவு கூர்தல் (ஆ) அங்கீகரித்தல்

(இ) திரும்ப ஒப்புவித்தல் **(ஈ) இவைகள் அனைத்தும்**

4. அறிவார்ந்த நடத்தை கீழ்கண்டவற்றுள் எதனை நேரடியாக சார்ந்துள்ளது?

**(அ) நினைவாற்றல்** (ஆ) உள்ளுணர்வு

(இ) உள்ளார்ந்த நடத்தை (ஈ) பிரதிபலிப்பு

5. இந்திய – அமெரிக்க விண்வெளிப் பொறியாளர், நாசாவின் செவ்வாய் 2020 திட்ட செயல்பாடுகளை வழி நடத்தியவர்.

(அ) ந.வளர்மதி **(ஆ) ஸ்வாதிமோகன்** (இ) கல்பனாசவ்லா (ஈ) தேவகி

6. எந்த அரசியலமைப்பு சட்ட திருத்தம் பொருளாதார ரீதியில் பலவீனமானவர்களுக்கு, 10% இட ஒதுக்கீட்டைஉறுதிப்படுத்துகிறது.

(அ) 100–வது **(ஆ) 103–வது** (இ) 27–வது (ஈ) 75–வது

7. இந்திய அணுக்கரு ஆற்றல் திட்டம் – படி3ல் ---------ஐ எதிர்கால எரிபொருளாகப் பயன்படுத்த திட்டமிட்டுள்ளது.

(அ) ரேடியம் (ஆ) போலோனியம் **(இ) தோரியம்** (ஈ) ஆக்டினியம்

8. பின்வரும் மொழிகளில் இந்தோ–ஆரிய மொழி குடும்பத்தில் சேராதது எது?

**(அ) பால்டி** (ஆ) பிகாரி (இ) பெங்காளி (ஈ) பகேலி

9. திபெத்தில் சாங்போ என்றழைக்கப்படும் நதி எது?

(அ) தாமோதர் (ஆ) மானஸ் **(இ) பிரமபுத்ரா** (ஈ) மஹாநந்தா

10. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் இந்தியாவின் பெரிய சமவெளி தொடர்பான சரியான கூற்று/கூற்றுகள் கருத்தில் கொள்ளவும்.

அ. உலகின் மொத்த நிலப்பரப்பில் இந்தியா 4.42 சதவீதத்தை கொண்டிருக்கின்றது

ஆ. இந்தியாவின் பரப்பளவு 3.2 மில்லியன் சதுர கி.மீட்டர்கள், ஆகவே இது உலகின் ஏழாவது பெரிய நாடாக உள்ளது.

(அ) அ மட்டும் **(ஆ) ஆ மட்டும்**

(இ) அ,ஆ ஆகிய இரண்டும் (ஈ) மேற்கூறிய ஏதுமில்லை

11. எந்த சட்டத்திருத்தத்தின் மூலம் (Secular) "சமய சார்பற்ற"என்ற வார்த்தை அரசியல் சாசனத்தின் முப்புரையில் சேர்க்கப்பட்டது?

(அ) 22வது (ஆ) 32வது **(இ) 42வது** (ஈ) 52வது

12. விஜயநகரத்து ரோஜா வியாபாரிகளைப் பற்றி குறிப்பிட்டவர் யார்?

(அ) பார்பரோசா **(ஆ) அப்துர் ரசாக்** (இ) நியூனிஸ் (ஈ) பயஸ்

13. அமத்யா அல்லது மஜீம்தார் என்பவரை மராத்திய ஆட்சியில் நியமனம் செய்தனர்

அ. அவர் மாநிலத்தின் வரவு செலவு கணக்கை பார்ப்பதில் பொறுப்பாக நியமிக்கப்பட்டார்.

ஆ. மன்னரின் பாதுகாப்பு மற்றும் தனி உதவியாளராகவும் அவரின் தினசரி வேலைகளை மேற்பார்வையிடுவதில்

இ. வெளியுறவுத் துறை மந்திரியாக நியமிக்கப்பட்டார்

ஈ. அரண்மனைக்கு வரும் தபால்களை பார்ப்பது அவரின் கடமையாகும்.

மேற்கூறியவற்றில் எதுசரியான கூற்றாகும்?

**(அ) அ** (ஆ) ஆ (இ) இ (ஈ) ஈ

14. மத்திய புலனாய்வு ஆணையம் பற்றிய தவறான சொற்றொடரை கண்டறிக:

**(அ) ஒரு சட்ட ரீதியான அமைப்பு**

(ஆ) ஒரு சட்டரீதியான அமைப்பு அல்ல

(இ) டெல்லி தனிப்பட்ட போலிஸ் படை அமைப்பு சட்டம் 1946லிருந்து தன் அதிகாரங்களை பெறுகின்றது

(ஈ) மத்திய அரசின் முக்கிய விசாரணை முகமை ஆகும்.

115. இந்தோ–திபெத் எல்லை காவல் எப்பொழுது ஏற்படுத்தப்பட்டது?

(அ) 2 அக்டோபர், 1969 (ஆ) 12 அக்டோபர், 1972

**(இ) 24 அக்டோபர், 1962** (ஈ) 30 அக்டோபர், 1975

16. கூற்று (கூ): ஆளுநர் மற்றும் அமைச்சரவைக்கு இடையே தகவல் தொடர்பு பாலமாக செயல்படுபவர் முதல்வர் ஆகும்.

காரணம் (கா): மாநிலஅமைச்சரவை குழுவுக்கு தலைவராக செயல்படுபவர் முதல்வராவார்

(அ) (கூ) தவறானதுமற்றும் (கா) சரியானது

(ஆ) (கூ) சரியானது மற்றும் (கா) தவறானது

winmeen.com

(இ) (கூ) மற்றும் (கா) இரண்டும் சரி, ஆனால் (கா), (கூ) க்கு சரியான விளக்கம் இல்லை

**(ஈ) (கூ) மற்றும் (கா) இரண்டும் சரி, மற்றும் (கா), (கூ)க்கு சரியான விளக்கம்**

17. 86–வது சட்டத்திருத்தம் மூலம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் விதி 51–Aல் சேர்க்கப்பட்ட சரியான சரத்தைக் கீழ்கண்டவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கவும்

(அ) தேசிய கீதம் மற்றும் தேசியக் கொடியை மதித்தல்

(ஆ) நாட்டின் இயற்கைச் சூழலைப் பாதுகாத்தல்

(இ) நாட்டின் பொதுச் சொத்தைப் பாதுகாத்தல்

**(ஈ) பெற்றோர் தங்கள் ஆறிலிருந்து பதிநான்கு வயது வரை உள்ள குழந்தைகளுக்கான கல்வி வழங்குதல்**

18. எதனால் சில செலவுகளை"திட்டம் சாரா வருவாய் செலவுகள்"என அழைக்கிறோம்?

(அ) திட்டம் போடப்படாத செலவுகள்

**(ஆ) ஐந்தாண்டு திட்டத்தில் வராத செலவுகள்**

(இ) திட்டம் போட்ட பின் சேர்க்கப்படும் செலவுகள்

(ஈ) மிகச் சொற்பமானசெலவுகள்

19. அரசியலமைப்பு முகப்புரை என்பது"அரசியலமைப்பின் அரசியல் ஜாதகம்"எனக் கூறியவர் யார்?

**(அ) கே.எம்.முன்ஷி** (ஆ) Dr.B.R.அம்பேத்கர்

(இ) மகாத்மாகாந்தி (ஈ) ஜவஹர்லால் நேரு

20. இந்திய ரிசர்வ் வங்கியின் செயல்பாடு/செயல்பாடுகளாவன:

1. நாணய வெளியீடு

2. அரசாங்கத்தின் வங்கியாளர்

3. வங்கிகளின் வங்கியாளர்

4. பரிமாற்ற மேலாண்மை மற்றும் கட்டுபாடு

(அ) 1 மட்டும் (ஆ) 2 மட்டும் (இ) 2 மற்றும் 4 மட்டும் **(ஈ) 1,2,3 மற்றும் 4**

21. அபிநவ பாரத சங்கம் தோற்றுவித்தவர் யார்?

(அ) ஜதின் தாஸ் (ஆ) சூர்யாசென்

(இ) மதன் லால் திங்க்ரா **(ஈ) கணேஷ் தாமோதர் சவர்கர்**

22. வங்காளத்தில் முதல் முஸ்லீம் இயக்கமான, முகமதிய இயக்கம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு

(அ) 1823 (ஆ) 1835 (இ) 1843 **(ஈ) 1855**

23. "நான் ஏன் நாத்திகவாதி"என்னும் கட்டுரையை எழுதியவர் யார்?

(அ) லாலா லஜபத் ராய் **(ஆ) பகத் சிங்**

(இ) பகவதி சரண் வோஹரா (ஈ) சந்திரசேகர் ஆசாத்

24. "பதினெட்டு ஐம்பத்தி ஏழு"என்ற புத்தகத்தை எழுதியவர்

(அ) டாக்டர்.அலெக்சாண்டர் டஃப் **(ஆ) டாக்டர்.எஸ்.என்.சென்**

(இ) வி.டி.சாவர்க்கர் (ஈ) ஜே.டபிள்யூ.கேய்

25. தமிழக சமூக நலவாரியம்

அ. 1954–ல் உருவாக்கப்பட்டது

ஆ. பெண்கள், குழந்தைகள் நலனை ஏற்படுத்து திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது.

இ. SCs & STs மற்றும் ஆதரவு இல்லாதோர்களுக்கான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மேல்கூறிய கூற்றுகளில் எது/எவைஉண்மை?

(அ) அ மட்டும் (ஆ) அ மற்றும் ஆ (இ) அ மற்றும் இ **(ஈ) அ, ஆ மற்றும் இ**

26. ரூ.32,000 அசலுக்கு 2 ஆண்டுகளுக்கு கிடைக்கும் கூட்டுவட்டிக்கும், தனிவட்டிக்கும் இடையேயுள்ள வித்தியாசம் ரூ.20 எனில் வட்டிவீதம் எவ்வளவு?

(அ) 2 1/3 % **(ஆ) 2 ½ %** (இ) 6 ¼ % (ஈ) 4 ½%

27. "மறைந்து போன தமிழ் நூல்கள்"ஆசிரியர் யார்?

**(அ) மயிலை சீனி வேங்கடசாமி** (ஆ) திருமேனி ரத்தின கவிராயர்

(இ) மு.ராகவ ஐயங்கார் (ஈ) மு.வை.அரவிந்தன்

28. தமிழக வரலாற்றில் "வர்ணா சிரம தர்மங்கள் அனுபாலித"என்று தங்களை அழைத்துக் கொண்டவர்கள்?

(அ) பல்லவர்கள் (ஆ) பாண்டியர்கள்

**(இ) நாயக்கர்கள்** (ஈ) புதுக்கோட்டை தொண்டைமான்கள்

29. "எண்தேர் செய்யும் தச்சன்

திங்கள் வலித்த கால்அன் னோனே"

–எனும் புறநானூற்று பாடல் உணர்த்தும் பொருள்.

**(அ) வலிமை உடையவன்** (ஆ) வெற்றி பெறுபவன்

(இ) கொடை கொடுப்பவன் (ஈ) புலவரை ஆதரிப்பவன்

30. "அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்

எந்தையும் உடையேம் எம்குன்றும் பிறர்கொளார்"

–எனும் புறநானூற்றுப் பாடல் உணர்த்தும் துறை எது?

**(அ) கையறுநிலை** (ஆ) மழபுல வஞ்சி

(இ) பொருண்மொழிக்காஞ்சி (ஈ) பெருங்காஞ்சி

31. பொருளாதார சூழலியலின் தந்தை எனப்படுபவர்

(அ) காந்திஜி **(ஆ) எம்.எஸ்.சுவாமிநாதன்** (இ) சிவன் (ஈ) நம்மாழ்வார்

32. கீழ்க்கண்ட கூற்றை ஆராய்க:

பார்சன் வேலி எதனை சார்ந்தது?

1. புனல் மின்சாரம் (நீர் ஆற்றல்).

2.சூர்ய சக்தி மின்சாரம்.

3.அணுமின் ஆற்றல்.

4.காற்றாலை மின்சாரம்.

மேலே உள்ளவையில் எது சரியான விடை?

(அ) 2,3 **(ஆ) 1** (இ) 1,4 (ஈ) 4

33. ஒவ்வொரு மாவட்டத்திலும், பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் முதலிடம் பிடிக்கும் தமிழக இந்து ஆதிதிராவிட மாணவர்களுக்கு (ஒரு ஆண் மற்றும் ஒரு பெண்) வழங்கப்படும் ரொக்க விருது ----------- ஆகும்.

(அ) திருவள்ளுவர் விருது (ஆ) அம்பேத்கார் விருது

**(இ) அண்ணல் காந்தி நினைவு விருது** (ஈ) பெரியார் விருது

34. தமிழக அரசின் முதல் மனிதவள மேம்பாட்டு அறிக்கை வெளியிடப்பட்ட ஆண்டானது

(அ) 2000 (ஆ) 2001 (இ) 2002 **(ஈ) 2003**

35. $\frac{2}{\sqrt{2}}, \frac{3}{2}, \frac{4}{2\sqrt{2}}, \frac{5}{4}$, ------------------

(அ) $\frac{6}{\sqrt{2}}$ (ஆ) 6 / 8 **(இ) $6/\sqrt[4]{2}$** (ஈ) $\frac{6}{\sqrt{5}}$

36. TICEL பூங்காஎன்பது

(அ) இரப்பர் பூங்கா (ஆ) ஜவுளி பூங்கா (இ) உணவுபூங்கா **(ஈ) உயிரிபூங்கா**

37. செங்கல்பட்டு மாவட்டத்தை"சென்னையின் நுழைவாயில்"என்று ஏன் அழைக்கலாம்?

**(அ) தென் மாவட்டங்களிலிருந்துதலைநகருக்குசெல்லும் நுழைவாயிலாக இருப்பதால்**

(ஆ) வடமாவட்டங்களிலிருந்துதலைநகருக்கு செல்லும் நுழைவாயிலாக இருப்பதால்

(இ) கிழக்கு மாவட்டங்களிலிருந்து தலைநகருக்கு செல்லும் நுழைவாயிலாக இருப்பதால்

(ஈ) மேற்கு மாவட்டங்களிலிருந்து தலைநகருக்கு செல்லும் நுழைவாயிலாக இருப்பதால்

38. $\frac{x^2-25}{x+3}$ என்பதை $\frac{x+5}{x^2-9}$ ஆல் வகுக்கும் போதுகிடைக்கும் ஈவு

(அ) (x–5) (x+3) **(ஆ) (x–5) (x–3)** (இ) (x + 5) (x – 3) (ஈ) (x + 5) (x+3)

39. +16–48 + 144 – 432 + .... என்ற பெருக்குத் தொடர் வரிசையின் முடிவுறா உறுப்புகள் வரை கூடுதல் காண்க:

**(அ) 4** (ஆ) –8 (இ) –3 (ஈ) –4

40. A முதல் N வரையிலான ஆங்கில எழுத்துக்கள் முறையே 14 முதல் 1 வரை குறிக்கப்படுகிறது. ஆங்கில எழுத்து O என்பது பூஜ்யத்தில் குறிக்கப்படுகிறது மேலும் P முதல் Z வரையிலான ஆங்கில எழுத்துக்கள் –1 முதல் –11 வரையிலான முழு எண்களால் குறிக்கப்பட்டால் SUCCESS என்ற ஆங்கில வார்த்தையில் உள்ள எழுத்துக்களைக் குறிக்கும் முழு எண்களின் கூடுதல் காண்க?

**(அ) 16** (ஆ) 20 (இ) 2 (ஈ) 18

41. ஒரு வெற்றுத் தொட்டியை குழாய் A 6 மணி நேரத்திலும் குழாய் B, 8 மணி நேரத்திலும் நிரப்ப முடியும். இரு குழாய்களும் திறக்கப்பட்டு, 2 மணி நேரத்திற்குப் பின் குழாய் A மூடப்பட்டால், மீதமுள்ள தொட்டியை நிரப்ப குழாய் B எவ்வளவு மணி நேரம் எடுத்துக் கொள்ளும்?

(அ) 7 மணிகள் (ஆ) 5 மணிகள் (இ) 5/96 மணிகள் **(ஈ) 3 1/3 மணிகள்**

42. A என்பவர் B என்பவரைக் காட்டிலும் வேலை செய்வதில் மூன்று மடங்கு வேகமானவர். B ஆனவர் ஒரு வேலையை 24 நாட்களில் முடிப்பார் எனில், இருவரும் இணைந்து அந்த வேலையை முடிக்க எத்தனை நாட்கள் எடுத்துக் கொள்வர் எனக் காண்க

(அ) 5 நாட்கள் **(ஆ) 6 நாட்கள்** (இ) 8 நாட்கள் (ஈ) 9 நாட்கள்

43. ரூ.500 க்கு 8% ஆண்டு வட்டியில் 2 ஆண்டுகளுக்கு கூட்டு வட்டிக்கும் தனிவட்டிக்கும் இடையேயுள்ள வித்தியாசம்

**(அ) ரூ.32** (ஆ) ரூ.38 (இ) ரூ.48 (ஈ) ரூ.50

44. 10% ஆண்டு வட்டியில் ஆண்டுக்கொருமுறை வட்டி கணக்கிடப்பட்டால், 3 ஆண்டுகளில் ---------- என்ற அசலானது ரூ.2,662 தொகையாக ஆகும்.

**(அ) ரூ.2,000** (ஆ) ரூ.1,800 (இ) ரூ.1,500 (ஈ) ரூ.2,500

45. 1000:10 = x:1/1000 எனில் x–ன் மதிப்பைக் காண்க:

(அ) 10 **(ஆ) 1/10** (இ) 1000 (ஈ) 1/1000

46. கீழ்க்கண்டவற்றுள் மிகப்பெரிய விகிதத்தைக் காண்க:

5:7, 1:2, 3:5, 7:10

**(அ) 5:7** (ஆ) 1:2 (இ) 3:5 (ஈ) 7:10

47. $21x^2y$, $35\ xy^2$ ஆகியவற்றின் மீப்பெரு பொது வகுத்தி (மீ.பொ.வ) காண்க:

(அ) $3x^3y^3$ (ஆ) $5x^3y^3$ **(இ) 7 xy** (ஈ) $9\ xy^2$

48. 408, 170 என்ற எண்களின் மீப்பெரு வகுத்தியை காண்க (மீ.பொ.வ) காண்க:

(அ) 36 **(ஆ) 34** (இ) 33 (ஈ) 30

winmeen.com

49. அதிக ஆற்றலுடன் விளங்கும் கதிர்வீச்சு ----------- ஆகும்

**(அ) எக்ஸ் கதிர்** (ஆ) புற ஊதாக் கதிர் (இ) அகச்சிவப்பு கதிர் (ஈ) கண்ணுறுஒளி

50. டெசிபல் என்பது -------------ஐ அளக்கும் ஒரு அலகு ஆகும்

(அ) கதிர்வீச்சின் செறிவு **(ஆ) ஒலிச்செறிவு**

(இ) ஒளிச்செறிவு (ஈ) வெப்பச்செறிவு

51. திறந்த மனப்பான்மை என்ற பண்பு ----------------- ஆகும்.

(அ) கண்டுபிடிப்பு (ஆ) கருத்து கற்றல்

(இ) அறிவியல் புலன்காட்சி **(ஈ) அறிவியல் மனப்பான்மை**

52. ஏன் இரண்டு சக்கர வாகனங்களில் டீசல் எஞ்சின் பொருத்தப்படுவதில்லை?

(அ) குறைந்ததிறன் (ஆ) அதிக புகை **(இ) அதிகதிறன்** (ஈ) குறைந்த அடர்த்தி

53."SANKALP" என்பது இதனோடு தொடர்புடைய தொடுதாக்கத்தின் முதற்படியாகும்

(அ) கற்றல் திட்டம் **(ஆ) திறன் மேம்பாட்டுதிட்டம்**

(இ) அதிகாரபரவலாக்க திட்டம் (ஈ) திறமை-உருவாக்கதிட்டம்

54.கேரளாமாநிலம் உருவாக்கப்பட்டவருடம்

(அ) 1943 (ஆ) 1946 (இ) 1953 **(ஈ) 1956**

55. கேலோ இந்தியா எந்த வருடம் கொண்டு வரப்பட்டது?

(அ) 2015-2016 **(ஆ) 2016-2017** (இ) 2017-2018 (ஈ) 2018-2019

56. UN உலக பாரம்பரிய தளம் உருவாக்கயிருக்கும் "புத்தமதத்தின் மெக்கா" -சிறப்பு மேம்பாட்டு மண்டலம் எங்கு உள்ளது?

(அ) புத்தகயா (ஆ) சாரநாத் **(இ) லும்பினி** (ஈ) முக்திநாத்

57. பின்வருவனவற்றுள் எது கோடைகாலப் பருவ வேளாண்மையுடன் தொடர்புடையது?

**(அ) சைட்** (ஆ) ராபி (இ) காரிப் (ஈ) வறண்ட வேளாண்மை

58. பின்வருவனவற்றுள் எந்த மண்ணில் உயிர்சத்து மிக அதிகமுள்ளது?

(அ) லேட்டரைட் மண் **(ஆ) காட்டுமற்றும் மலைமண்**

(இ) சதுப்புநிலமண் (ஈ) வண்டல் மண்

59. புகழ்பெற்ற "விருபாக்ஷா" கோவில் அமைந்துள்ள இடம் எது?

(அ) ஸ்ரீ காளஹஸ்தி (ஆ) ஸ்ரீ பத்ராசலம் **(இ) ஹம்பி** (ஈ) சிதம்பரம்

60. மராத்திய நிர்வாக முறையில் "சுமந்த்" என்பவர் யார்?

(அ) பிரதம அமைச்சர் (ஆ) சேனாபதி (இ) நீதிபதி **(ஈ) வெளியுறவுஅமைச்சர்**

61. கீழ்கண்டவைகளில் தௌலதபாத் பற்றிய கூற்றுகளில் சரியானது எது?

1. தௌலதபாத் என்றால் செல்வம் கொழித்த நகரம் என்றுபெயர்.

2. தௌலதபாத்தின் மற்றொரு பெயர் தேவகிரி.

3. முகமது பின் துக்ளக் தலைநகரை டெல்லியில் இருந்து தேவகிரிக்கு மாற்றினார்.

4. தௌலதபாத், பாமினி அரசின் ஒரு பகுதியாகும்.

(அ) 1 மட்டும் (ஆ) 2 மட்டும் (இ) 3 மட்டும் **(ஈ) 1,2,3,4**

62. டெல்லியில் முதல் ஆப்கான் ஆட்சியை நிறுவியவர்

(அ) மாலிக் பர்ஹாம் (ஆ) மாலிக் மர்தான் தௌலத்

**(இ) பஹலுல் லோடி** (ஈ) இஸ்லாம் கான்

63. சிந்து சமவெளியில் கண்டுபிடிக்கப்பட்ட மிக குறைந்த அளவு எடை

(அ) .675g (ஆ) .850g **(இ) .875g** (ஈ) .785g

64. பின்வருவனவற்றை பொருத்துக:

அ. R,V.S.பெரி சாஸ்த்திரி 1. முன்னால் தலைமை தேர்தல் ஆணையர்

ஆ. A.N.ராய் 2. முன்னால் இந்திய தலைமை நீதிபதி

இ. சரன் சிங் 3. முன்னால் இந்திய பிரதமர்

ஈ. B.N.ஜா 4. முன்னால் UPSC தலைவர்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **(அ)** | **1** | **2** | **3** | **4** |
| (ஆ) | 2 | 4 | 1 | 3 |
| (இ) | 3 | 2 | 4 | 1 |
| (ஈ) | 4 | 3 | 1 | 2 |

65. இந்திய ஒன்றியத்தின் பாதுகாப்புப் படைகளின் மீதான உயர்தனி ஆணையதிகாரம் யாரிடம் உற்றமைந்திருக்கிறது?

**(அ) குடியரசுத் தலைவரிடம்**

(ஆ) பாராளுமன்றத்திடம்

(இ) குடியரசுத் தலைவரிடம்; ஆனால் பாராளுமன்ற நெறிமுறைகளுக்கு உட்பட்டு

(ஈ) முப்படைத் தலைமைத் தளபதியிடம்

66. கீழ் சொல்லப்பட்டவற்றுள் "நாங்கள் ஆணையிடுகிறோம்" என்ற பொருள் உணர்த்துவது -------------- மனு

(அ) ஆட்கொணர்வுமனு **(ஆ) மாண்டமுஸ்**

(இ) கோவாரண்டோ (ஈ) செர்டியோராரி

67. புதிய அகில இந்தியப் பணியினை ----------------ஆல் உருவாக்க இயலும்

**(அ) பாராளுமன்ற சட்டத்தின் மூலம்**

(ஆ) குடியரசுத் தலைவரின் ஆணையின் மூலம்

(இ) மாநிலங்களின் அவை தீர்மானத்தின் மூலம்

(ஈ) மத்திய பணியாளர் தேர்வாணையத்தின் தீர்மானம் மூலம்

68. இந்தியாவில் குறு விவசாயிகள் வைத்திருக்கும் நிலத்தின் அளவு

**(அ) 1 ஹெக்டேர்** (ஆ) 2 ஹெக்டேர் (இ) 4 ஹெக்டேர் (ஈ) 10 ஹெக்டேர்

69. 13வது நிதிக் குழுவின் தலைவர் யார்?

(அ) என்.கே.பி.சால்வே (ஆ) கே.சி.பந்த் **(இ) விஜய் கேல்கர்** (ஈ) ரங்கராஜன்

70. இந்திய எழுச்சியின் தந்தை எனக் கருதப்பட்டவர் யார்?

**(அ) பாலகங்காதரதிலகர்** (ஆ) பிபின் சந்திரபால்

(இ) சி.ஆர்.தாஸ் (ஈ) கோபாலகிருஷ்ண கோகலே

71. இந்திய பொருளாதாரத்தில் பிரதான இடம் வகிப்பது

(அ) வணிகம் **(ஆ) விவசாயம்**

(இ) பொதுத்துறை தொழிற்சாலைகள் (ஈ) உற்பத்தி துறை

72. 1895ஆம் ஆண்டு சிவாஜி இயக்கத்தை தொடங்கியவர்

(அ) தாதாபாய் நௌரோஜி (ஆ) மகாத்மாகாந்தி

**(இ) பாலகங்காதர திலகர்** (ஈ) சுபாஷ் சந்திரபோஸ்

73. "பிறப்பொக்கும் எல்லாஉயிர்க்கும்"

– என்றவர்

(அ) கம்பர் (ஆ) இளங்கோவடிகள் (இ) திருமூலர் **(ஈ) திருவள்ளுவர்**

74. ஹேம் சந்திரகாரின் பிரகடனம் -------------- கிளர்ச்சிக்கு வழி வகுத்தது

**(அ) இண்டிகோகிளர்ச்சி** (ஆ) பாப்னா கிளர்ச்சி

(இ) தக்காணக் கலகம் (ஈ) குக்காகிளர்ச்சி

75. சி.என்.அண்ணாதுரை முதல் மந்திரியாகஅதிகாரத்தில் பொறுப்பேற்றஆண்டு

**(அ) 1967** (ஆ) 1969 (இ) 1968 (ஈ) 1966

76. எந்த ஆண்டு இந்திய மக்கள் தொகைகணக்கெடுப்பில் தமிழ்நாட்டின் சில சாதியினர் சத்திரிய அந்தஸ்தினை கோரினர்?

(அ) 1865 (ஆ) 1882 **(இ) 1901** (ஈ) 2001

77. கரூர் பிரிவினை வழக்கு எந்த இயக்கத்தோடு தொடர்புடையது?

**(அ) சுதேசி இயக்கம்** (ஆ) இண்டிகோ இயக்கம்

(இ) வெள்ளையனே வெளியேறு இயக்கம் (ஈ) தன்னாட்சி இயக்கம்

78. 600 ன் x% ஆனது 450 எனில் x–ன் மதிப்பென்ன?

**(அ) 75** (ஆ) 100 (இ) 125 (ஈ) 150

79. "பசுவய்யா" என்னும் புனைப்பெயரில் புதுக்கவிதை எழுதியவர் யார்?

(அ) நகுலன் **(ஆ) சுந்தரராமசாமி** (இ) கலாப்பிரியா (ஈ) விக்கிரமாதித்தன்

80. திருமாலின் வெற்றியைப் புகழ்வது ––––––––––– என்னும் துறையாகும்.

(அ) புறநிலைவாழ்த்து (ஆ) வாள் மங்கலம் **(இ) கந்தழி** (ஈ) வாயுறைவாழ்த்து

81. தன் மனத்திலே சிவபெருமானுக்குக் கோயில் கட்டிய நாயனார்

(அ) நேசநாயனார் (ஆ) சடையநாயனார் (இ) இசைநாயனார் **(ஈ) பூசலார் நாயனார்**

82. வரலாற்றுக்கு முந்தைய எந்த காலக் கட்டத்தில் சுடுமண் உருவக் கலை வழக்கத்திற்கு வந்தது?

(அ) செம்புகாலம் (ஆ) பெருங்கற்காலம் **(இ) புதியகற்காலம்** (ஈ) இரும்புக்காலம்

83. கபாடபுரம் கடலால் மூழ்கடிக்கப்பட்டபோதுஆட்சிசெய்தபாண்டியமன்னன்

(அ) கடுங்கோன் (ஆ) காய்சினவழுதி

(இ) முடத்திருமாறன் (ஈ) நெடுஞ்செழியன்

84. பின்வருவனவற்றை பொருத்துக:

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| அ. TNeGA | 1. ஸ்டேட் நோடல் ஏஜென்சி |
| ஆ. இ–சேவை | 2. நிகழ்நிலைச் சேவைகள் |
| இ. TN–GIS | 3. தொலையுணர்வு தொழில் நுட்பம் |
| ஈ. Block chain back bone | 4. நம்பிக்கை இணையம் |

அ ஆ இ ஈ

| | | | | |
|---|---|---|---|---|
| **(அ)** | **1** | **2** | **3** | **4** |
| (ஆ) | 2 | 1 | 3 | 4 |
| (இ) | 1 | 2 | 4 | 3 |
| (ஈ) | 4 | 3 | 2 | 1 |

85. வரிசை I வரிசை II உடன் பொருத்திசரியான விடையை தேர்ந்தெடுக்க:

| வரிசை I | வரிசை II |
|---|---|
| அ. மாநிலமகளிர் ஆணையம் | 1. அவசர நேரத்தில் பெண்களுக்குஉதவுவது |
| ஆ. மாநில பெண்கள் வளமையம் | 2. பாதிக்கப்பட்டபெண்களுக்குபாதுகாப்பளிப்பது |
| இ. ஒரு நிறுத்த நெருக்கடி மையம் | 3. பெண்களுக்கான முழுமையான அதிகாரமளித்தல் |
| ஈ. பெண்கள் உதவித் தொலைபேசி தொடர்பு எண் திட்டம் | 4. பாலினபிரச்சனைகளை கையாள்வது |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| (அ) | 4 | 2 | 1 | 3 |
| **(ஆ)** | **4** | **3** | **2** | **1** |
| (இ) | 1 | 4 | 2 | 3 |
| (ஈ) | 2 | 4 | 1 | 3 |

86. சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் பயனாளிகள்:

1. வயது வரம்பு இல்லை.

2. வருமான வரம்பு இல்லை.

3. ஆதரவற்ற விதவை.

4. பயனாளிகள் பெண் குழந்தை வைத்திருக்க வேண்டும்.

பின்வருபவற்றில் எது சரியான விடை?

(அ) 1 மற்றும் 2 **(ஆ) 3 மட்டும்** (இ) 3 மற்றும் 4 (ஈ) 4 மட்டும்

87. பின்வரும் தொடரின் கூடுதலைக் காண்க:

$12^2 + 13^2 + 14^2 +$ ------------ $+ 35^2$

**(அ) 14404** (ஆ) 14104 (இ) 14204 (ஈ) 14304

88. ஆண்டுக்கு x% வட்டி வீதம் x ஆண்டுகளுக்கு ரூ.x தனிவட்டியாக கிடைக்க பெறும் அசல் (தொகை) எவ்வளவு?

winmeen.com

(அ) ரூ.x **(ஆ) ரூ. {100/x}** (இ) ரூ.100 x (ஈ) ரூ.{100/$x^2$}

89. அடுத்த உறுப்பைக் காண்க:

1/2, 1/3, 5/6, 7/6, 2, ?-------

(அ) – 5/6 (ஆ) 7/3 (இ) 4 **(ஈ) 19/6**

90. IS = 26 மற்றும் WAS = 38 எனில் AREன் மதிப்பு எதற்கு சமம்?

(அ) 60 (ஆ) 63 **(இ) 57** (ஈ) 58

91. இரண்டு நாணயங்கள் ஒன்றாகச் சுண்டப்படுகின்றன. இரண்டு நாணயங்களிலும் வெவ்வேறு முகங்கள் கிடைப்பதற்கான நிகழ்தகவு என்ன?

(அ) 1 (ஆ) 1/4 **(இ) 1/2** (ஈ) 3/4

92. 20 சிவப்பு நிறப் பந்துகள் அடங்கிய பையிலிருந்து ஒரு சிவப்பு நிறப் பந்து கிடைப்பதற்கான நிகழ்தகவு காண்க:

(அ) 0 **(ஆ) 1** (இ) 1/20 (ஈ) 1/2

93. ஒரு செவ்வகத்தின் மூலைவிட்டம் $\sqrt{41}$ செமீ மற்றும் அதன் பரப்பு 20 ச.செமீ எனில் செவ்வகத்தின் சுற்றளவுஎன்ன?

(அ) 9 செமீ **(ஆ) 18 செ.மீ** (இ) 20 செமீ (ஈ) 41 செமீ

94. ஒரு திண்ம அரைக் கோளத்தின் அடிப்பரப்பு 1386 ச.மீ எனில், அதன் மொத்தப் புறப்பரப்பைக் காண்க:

(அ) 4158 மீ$^3$ **(ஆ) 4158மீ$^2$** (இ) 4185மீ$^2$ (ஈ) 4185 மீ

95. ஒரு குறிப்பிட்ட தொகையானது 8% வட்டி வீதத்தில் 5 ஆண்டுகளில் ரூ.10,080 ஆகிறது. அசலைக் காண்க:

(அ) ரூ.7,000 **(ஆ) ரூ.7,200** (இ) ரூ.7,100 (ஈ) ரூ.7,300

96. எத்தனை ஆண்டுகளில் ரூ.5,600 ஆண்டுக்கு 6% தனிவட்டி வீதத்தில் ரூ.6,720 ஆக உயரும்?

(அ) 3 ஆண்டுகள் (ஆ) 4 ஆண்டுகள் **(இ) 3 1/3ஆண்டுகள்** (ஈ) 2 ஆண்டுகள்

97. சுருக்குக: x+2/$x^2$+3x+2 + x−3/$x^2$−2x−3

(அ) 1/x+1 (ஆ) −1/x+1 **(இ) 2 /x+1** (ஈ) −2/x+1

98. சுருக்குக:

[−1/3] – {1/(2/3 x 5/7)} +8−[5−1/2 – ¼]}

**(அ) −5 41/60** (ஆ) −5 1/60 (இ) 5 41/60 (ஈ) −3 41/60

99. 12 மற்றும் 18 ஆகியஎண்களின் மீ.பெ.கா மற்றும் மீ.சி.ம வின் விகிதத்தைக் காண்க:

**(அ) 1:6** (ஆ) 2:3 (இ) 3:4 (ஈ) 4:5

100. இருசார் பகா எண்களின் மீ.சி.ம 6006. ஓர் எண் 66 எனில் மற்றோர் எண் என்ன?

(அ) 1001 (ஆ) 101 **(இ) 91** (ஈ) 6